Regd. No. M. 4[illegible]

ஸ்ரீ:

ஸ்ரீ தன்வந்தரயே நம:

॥ वैद्यचन्द्रिका ॥

வைத்ய சந்த்ரிகா

தமிழ் நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின்
ஆதரவில் நடந்துவரும் மாதப் பத்ரிகை.

Vol. 9 February, 1947 No. 2

ஆசிரியர்:

V. B. நடராஜ சாஸ்த்ரி, ஆயுர்வேதாசார்ய.
வைத்ய விசாரத, வைத்யவாசஸ்பதி.

ப்ரகாசகர்: பண்டித ஸ்ரீ. மெ. ஸுந்தரராஜாசார்யர்.

விஷயங்கள்.

பத்ரிகாசிரியரின் குறிப்புகள். 11
ஆயுர்வேதத்தில் ஆராய்ச்சி எவ்விதம்
செய்ய வேண்டும்? 14
பாண்டு ரோகம் 20
ஆரோக்கிய சந்த்ரிகா—அநுபந்தம், 23
14-வது தமிழ் நாடு ஆயுர்வேத
மஹா ஸம்மேளனம். 27

வருஷச்சந்தா ரூ. 3—0—0

குறிப்பு

வைத்ய சந்த்ரிகையில் பிரசுரம் செய்ய வேண்டிய விஷயங்கள், கட்டுரைகள் முதலிய அநுப்ப வேண்டிய விலாஸம்:—

ஆசிரியர், வைத்ய சந்த்ரிகா,

ஆத்ரேய ஆயுர்வேதிக் ஓர்க்ஸ்,

தென்னூர் ரோடு, திருச்சினுப்பள்ளி.

வைத்ய சந்த்ரிகையின் சந்தா, விளம்பர விகிதங்கள் மற்றும் தமிழ் நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் ஸகல விஷயங்களையும் குறித்து எழுத வேண்டிய விலாஸம்:—

வைத்ய வாசஸ்பதி பண்டிட் P. S. ராமசர்மா,

பொதுக் கார்யதர்சி,

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்,

கரூர். (திருச்சி ஜில்லா)

ஸ்ரீ தன்வந்தரயே நம:

வைத்ய சந்த்ரிகை.

தொகுதி 9	பிப்ரவரி, 1947	பகுதி 2

காகிதக் கொடுமை.

காகிதம் காலத்தில், வேண்டிய அளவில், தேவையான ரகத்தில் கிடைப்பது மிகக் கடினமாயிருக்கிறது. காகிதப் பஞ்சம் இன்னும் குறைந்த பாடில்லை. வைத்ய சந்திரிகை புதிய வருஷாரம்பமாகிய சென்ற ஜனவரி மாதத்திலிருந்தே ஆகிருதியில் பெரிது செய்ய வேண்டுமென்ற நமது ஆவலைப் பூர்த்தி செய்ய இயலவில்லை, மாஸ சூன்ய மில்லாமல் செய்ய சிறிய அளவில் சந்திரிகையைப் பிரசுரம் செய்தது கூட மிகக் கஷ்டத்தினாலேயே ஸாத்தியமாயிற்று. இந்த மாதத்தில் சற்று அதிகப் பக்கங்களுடன் வெளியிட சௌகர்யப் பட்டது என்பதால் சிறிது ஆறுதலடைகிறோம்.

14-வது தமிழ் நாடு ஆயுர்வேத மஹா ஸம்மேளனம், சிதம்பரம்.

1947 ஜனவரியில் கடைசி வாரத்திலிருந்து பிப்ரவரி கடைசி வாரத்துக்கு மாற்றப் பட்டிருக்கிறது. முக்கிய காரணம்— வரவேற்புக் கமிட்டிக் காரியதரிசியின் சீர ஆரோக்கியக் குறைவே. குறிப்பிட்ட காலத்தில் ஸம்மேளனம் நடைபெறுத குறை தெரியாத படி (ஸம்மேளனம் நடத்தும் பொழுது) ஸம்மேளனத்தை வரவேற்பு சங்கத்தார் வெகு விமரிசையாக நடத்துவார்கள் என்று எதிர் பார்க்கிறோம்,

35-வது நிகில பாரத ஆயுர்வேத மஹா ஸம்மேளனம்.

1947 பிப்ரவரி 12-உ முதல் 4 நாட்கள் கான்பூரில் நடக்கின்

றது. சென்னை டாக்டர் A. லக்ஷ்மீபதி B.A.M.B.C.M. பிஷக்ரத்ன அவர்கள் தலைமை வகிக்கிறார். டாக்டர் லக்ஷ்மீபதி அவர்கள் வைத்திய உலகில் பல வாண்டுகளாகவே மிகப் பிரஸித்தி பெற்றவர். நிகில பாரத ஆயுர்வேத மஹா சம்மேளனத்தின் தலைமை ஸ்தானத்திற்கு இவர் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பது இது இரண்டாவது தடவையாகும். டாக்டர் லக்ஷ்மீபதி ஆயுர்வேத விஷயமாக பல வகையிலும் பெரிய உழைப்பாளி என்பது நிர்விவாதம்; நிஸ்ஸம்சயம். ஆதலால் இவருடைய வழிகளில் நமக்கு விசேஷ அபிப்பிராய பேதமிருப்பினும் இவ்வருஷமிவர் ஆயுர்வேத ராஜ்ய பதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டதை மகிழ்ச்சியுடனே வரவேற்கிறோம்.

சென்னையில் காங்கிரஸ் அரசாட்சி ஏற்பட்டு தன் மனோவிஸ்காதார மந்திரியாகவும் ஆன உடனிலிருந்து இந்தப்பெரிய ஸௌகர்யத்தை உபயோகப்படுத்திக்கொண்டு டாக்டர் லக்ஷ்மீபதி அவர்கள் சென்னைமாகாணத்தில் ஆயுர்வேத விஷயமாகத் தன்வழியில் வெகுமுன்னேற்றங்களை வேகத்தில் நடத்த அரசாங்கத்தில் உள்ளும் புறமும் பற்பல கார்யங்களை அல்லும் பகலுமாகச்செய்தார். இந்திய வைத்யாபிவிருத்தி விஷயத்தில் ஸ்பெஷல் ஆபீஸராக வைத்தியர் ஒருவரை அமைத்தால் 'தன் மனோபீஷ்டப்படிக்கார்யங்கள் நிறைவேறுது' என்று நிச்சயித்து முன்யோஜனையுடன் வைத்திய வாஸனையற்ற ஒரு பெரியவரை ஸ்பெஷல் ஆபீஸர் பதவி அதிகாரத்துடன் கையாளாகவும் அமைத்துக் கொண்டார். பிராசீன விசுத்தாயுர்வேத சம்பிதாயப் படியே ஆயுர்வேதத்தை எல்லா விதத்திலும் அபிவிருத்தி சேய்யவேண்டுமென்ற லக்ஷ்யத்தைக் கொண்டவர்களுடைய ஸங்கயை அதிகம் பெற்றுள்ளதானதொரு பிரதான ஸங்கமான நிகில பாரத ஆயுர்வேத மஹாமண்டலத்தின் ஆதிபத்யத்தையும் இப்போது அடைந்துள்ளார். ஆகவே, ஸ்ரீ லக்ஷ்மீபதி அவர்களுக்கு அவருடைய சொந்த மதத்தை ஆயுர்வேதப் பொது ஜனங்களின் மதமாகப் பிரசாரம் செய்யவும் கார்யங்களை அநுஷ்டிக்கவும் நிஜ நாட்டவும் சாதன ஸம்பத்விசேஷமாய் இப்போது ஏற்பட்டிருக்கிறது. டாக்டர் லக்ஷ்மீபதியின் ஆயுர்வேத ராஜ்யம் எவ்வாறு பரிணமிக்கப் போகிறதென்பதை க்ரமேண காலமறிவிக்கும்.

பாஷாவாரி கலாசாலைகள்.

தமிழ், ஆந்த்ரம், கேரளம், கர்ணாடகபாஷாவாரியாக நான்கு திக்குக்களிலும் நான்கு ஆயுர்வேத காலேஜ்களும், சென்னை மாநகரில் ஒரு மத்யதர காலேஜும், ஆராய்ச்சிக் கழகமும் சேர்ந்தாப்போல் நிறுவ வேண்டுமென்று சென்னை சர்க்கார் ஆர்ப்பாடங்

கள் பெரியதாய்ச் செய்து, எல்லாவற்றுக்கும் ரூபாயைப்பற்றின வரையிலோ ஐந்து லக்ஷமே வகுத்து வைத்தார்கள். சொன்ன வைகளை க்ரியாம்சையில் கொண்டு வரும் குறி ஒன்றையுமிது வரையில் காணோம். பாஷாவாரி காலேஜ்கள் நான்கு ஏற்பாடு செய்யும் சிந்தனையையே சர்க்கார் தற்சமயம் முற்றிலும் நிறுத்தி விட்டதாகவும், சென்னை நகரில் மட்டும் ஒரு காலேஜும் ஆராய்ச்சிக் கழகமும் மட்டும் ஸ்தாபிக்கும் சிந்தனையில் இருப்பதாகவும் கேழ்வியுற்றோம். இதற்குக்காரணம் தேடவேண்டியதில்லை. ஐந்து காலேஜ்களும் ஆராய்ச்சிக் கழகமும் ஏக காலத்தில் ஆரம்பம் செய்ய இந்த ஐந்து லக்ஷம் ரூபாய் அம்ச மாத்திரத்திலும் போதாது, தேவையான தகுந்த உபாத்தியாயர்களும் பாட புத்தகங்களும் கிடையா என்பதை நாம் பன் முறை சர்க்காரால் ஏற்படுத்திய ஆலோசனைக் கமிட்டியில் அந்த ஸ்பெஷல் ஆபீஸருக்கு முன்னிலையில் எடுத்து விளக்கிஞேம். அவருக்கு அப்போது புரிய வில்லை.

இப்பொழுதும் நமக்குப் பெரிய சிந்தனை. சென்னை நகரில் ஒரு காலேஜும் ஆராய்ச்சிக் கழகமும் எவ்வகையில் சர்க்கார் நடத்தப் போகிறார்கள்? கிழ்ப்பாக்கத்தில் இருந்து வரும் பள்ளிக் கூடத்திலும் ஹாஸ்டலிலும் "இந்திய வைத்திய ஸ்கூல்" என்றிருக்கும் பெயர்களை யெல்லாம் நன்றாக அழித்து "இந்திய வைத்திய காலேஜ்" என்று அழகாய் எழுதி காலேஜ் ஸ்தாபிதமாகிவிட்டது என்று ஏட்டில் பதிந்து விடப் போகிறார்களா? அல்லது வர்த்தமான இந்திய வைத்திய ஸ்கூலை யதார்த்தத்தில் காலேஜ் யோக்யதைக்கு உயர்த்தி விட்டுப் பெயர் வைக்கப் போகிறார்களா? கிழ்ப் பாக்கத்தில் நாளது வரை அநுஷ்டிக்கப் படும் போதனை முறையில் ஆயுர்வேதத்தைப் பற்றின வரையில் 'ஸ்கூல்' என்று சொல்லப்படும் கிழ்த்தரப் பள்ளிக்கூடத்திற்கு இருக்க வேண்டிய அவ்வளவு யோக்கியதாம்சம் கூட மாணவர்களுக்கு ஏற்படக் கூடியதாக இல்லை என்பதாகத் தேறிய மாணவர்கள் பிரத்யக்ஷப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மாணவர் பேரிலோ உபாத்தியாயர் பேரிலோ குறைகூற இடமில்லை. தகுந்த யோக்கியதை அடைய அவசியமான சாதனக்குறைவும், அனுஷ்டான பத்ததியிலிருக்கும் தோஷங்களுமே காரணம். ஆதலால் அதிகாரிகள் அந்தந்த விஷயத்தில் தகுந்த நிபுணத்துவம் வாய்ந்தவர்களைக் கொண்டு உசிதப்படிக்கு எல்லாவற்றையும் சீர் திருத்துவதன் மூலம் யதார்த்தமான காலேஜ் ஸ்தாபனம் செய்ய வேண்டும். பெயரளவில் செய்வதற்கு செய்யாதிருத்தலே நலம்.

ஆராய்ச்சி விஷயமும் இவ்விதமே. இதைப்பற்றி இந்த விதழில் பிரசுரமாகும் நிரூபம் ஆயுர்வேதத்தில் ஆராய்ச்சி செய்ய வேண்டிய வழியில் ஓரளவு அபிப்பிராயம் தரும்.

ஸ்ரீ:

ஆயுர்வேதத்தில் ஆராய்ச்சி எவ்விதம் செய்ய வேண்டும்?

(ஆயுர்வேதாசார்ய வி. பி. நடராஜ சாஸ்த்ரீ)

இருக்கும் சாஸ்த்ர தத்துவங்களை சத்தியமாக அறிந்து கொள்ளுவதற்கும் புதிய சூக்ஷ்மங்களை வெளிப் படுத்துவதற்கும் ஆராய்ச்சி ஒவ்வொரு சாஸ்திரத்திற்கும் அவசியமென்பது நிர்விவாதம். ஆயுர்வேதத்தில் ஆராய்ச்சி எந்த முறையில் செய்ய வேண்டும்? இதற்கு அதிகாரிகள் யார்? அதாவது ஆராய்ச்சி செய்யத் தொடங்குபவனுக்கு என்ன யோக்கியதை இருக்கவேண்டும்? ஆராய்ச்சிக்கு என்னென்ன சாதனங்கள் வேண்டும் என்று விசாரிப்போம். பொதுவில் ஆராய்ச்சியின் ஸ்வரூபம் ஆராய்ச்சிக்காரரின் லக்ஷ்யத்திற்கு ஏற்றபடி அமையும். அதற்குத்தகுந்தபடி சாதனங்களும் வேண்டும்.

முதல் சாரார்:— மேல் நாட்டுப் புதிய வைத்திய சாஸ்திரிகள் அவர்களுடைய நவீன விஞ்ஞான சாஸ்திரப் பிரகாரம் ஆயுர்வேதத்தில் சொல்லியிருக்கும் திரிதோஷ சித்தாந்தங்களையும் திரவியங்களுடைய ரஸ வீர்ய விபாகங்களையும் மற்றவைகளையும் கண்டு பிடித்து தங்களுடைய சாஸ்திர சித்தாந்தத்தின் படிக்கு ஆயுர்வேதம் எவ்வளவு தூரம் ஒற்று வருகிறது என்று ஆராய்வது ஒன்று. இந்த லகையான ஆராய்ச்சி மேல் நாட்டு வைத்திய சாஸ்திரிகள் தத்துவாந்வேஷணபுத்தியுடன் செய்வார்களாகில் மிகவும் சிலாக்கியமாகும். அவர்களுடைய சாஸ்திராபிவிருத்திக்கு உபகாரம் கிடைக்குமா கிடைக்காதா வென்று ஆராய்ச்சி செய்து பார்த்தபிறகே தீர்மானிக்க முடியும்.

ஆனல் இவ்விதஆராய்ச்சி இதுவரையில் யாரும் செய்ததில்லை. இதைச்செய்யும் சக்தி வாய்ந்த வித்வானும் இதுவரை அவதரித்ததாகத் தெரியவில்லை. இந்த ஆராய்ச்சி செய்யும் ஆற்றல் நவீன வெளிநாட்டு வைத்திய சாஸ்திரத்

திலும் விஞ்ஞான சாஸ்திரங்களிலும் ஆராய்ச்சித் துறையி லும் மட்டும் நிபுணத்துவம் பெற்றிருந்தால் போதாதே, இவைகளுடன் ஆயுர்வேதத்திலும் அதற்கு மூலபூதமாய் உள்ள 'தர்சன'ங்களிலும் பூர்ண பாண்டித்தியம் கூடப் பெற்றிருந்தால் அல்லவோ முடியக்கூடியது.

அடுத்த சாரார் :— நவீன வைத்திய சாஸ்திரிகளால் ஆயுர்வேதத்தில் இன்று ஏதோ செய்யப்பட்டுள்ள ஆராய் ச்சி எல்லாம் கேவலம்— சில ஔஷதத்திரவியங்களில் மட்டுமே தவிர வேறில்லை. ஏதாவது ஒரு செடி அல்லது தாதுவை எடுத்துக்கொண்டு அதன் உபாதானங்களை நவீன சாஸ்த்திரப்பிரகாரம் அலசிப்பார்த்து சரீரத்தில் எந்த அவ யவத்தில் கார்ய காரியாயிருக்கிறதென்று பார்ப்பதுடன் ஆராய்ச்சி முடிகிறது. இதனாலையும் பயன் Modern Materia Medicaவிற்கு சில திரவியங்கள் அதிகம் சேருவ தைப் பார்க்கிலும் ஆயுர்வேதத்திற்கோ அலோபாதிக் குக்கோ தத்வாவிஷ்காரத்தில் யாதுமில்லை. இது போன்ற ஆராய்ச்சிசெய்பவருக்கு ஆயுர்வேதஞானமோ தலிப்பட்ட விசேஷ சாதனமோ அவசியமில்லை. மேல் நாட்டு நவீன வைத்திய சாஸ்திரப்படி திரவியங்களை அலசிப்பார்க்கும் வழியில் ஒரு ரஸாயனசாலை (Laboratory) யும், அப்பியாஸ மும் இருந்தால் சுலபமாய் இந்த ஆராய்ச்சி நடத்தி விட லாம். இவ்வழி இன்று உலகில் எங்கும் ஸாதாரணமாகி விட்டது.

மூன்றுவது சாரார் :— இந்தக் காலத்தில் ஆயுர்வேத மும் ஆங்கில வைத்தியமும் பயின்றுள்ளதாக அபிமான முடையவர்கள் சிலர் ஆயுர்வேதத்தில் ஆராய்ச்சி நவீன முறையில் செய்ய வேண்டும். (Research in Ayurveda on Modern lines) என்று வெகுவாய்ச் சொல்லுவதும் இந்த ஆராய்ச்சிக் கிரமத்தையே பெரும்பாலும் கருதுகின்றனர். ஆனலிது போன்ற ஆயிரம் ஆராய்ச்சி முடிந்தாலும் ஆயுர் வேத சாஸ்த்ர தத்துவங்கள் என்ன அறியப் பட்டனவா கும்; வெளியானதாகுமென்று ஆலோசித்தால் ஒன்று மாக முடியாது. ஏன்? இந்த ஆராய்ச்சி ஆயுர்வேதத்

தைப் பற்றியதல்லவே. ஆயுர்வேத சாஸ்த்ரத்தில் கூறப் பட்டுள்ள திரவியங்களை நவீன விஞ்ஞானிகள் தன் வழி யில் ஆராய்ச்சிக்காக எடுத்துக்கொண்டால் இதனால் ஆயுர் வேத சாஸ்திரத்திற்கு என்ன சம்பந்தம் கல்ப்பிக்க ஸாத் தியம்?

பின் ஆயுர்வேத ஆராய்ச்சி என்பது உன் மதத்தில் என்ன? ஆயுர்வேதசித்தாந்தப்படி ஆராய்ச்சி செய்வதே ஆயுர்வேதியமாகும். அதாவது— ஆயுர்வேதத்தில் சொல் லிய த்ரிதோஷங்கள், பஞ்சபூதங்கள், த்ரயோதச அக்னி கள், திரவியங்களுடைய ரஸ வீர்ய விபாகப்பிரபாவங்கள், லகுரூக்ஷாதி குணங்கள், தோஷ தூஷ்யப் பிரகிருதி விகிருதி கள், ரோகோத்பத்தி ஹேதுக்கள், சிகித்ஸா யுக்திகள், பஞ்ச கர்மாக்கள், சஸ்த்ர சிகிச்சை, ரஸாயன வாஜீகரண விதானங்கள், மனஸ் தத்துவங்கள். பேஷஜ கல்பங்கள் முதலிய இவைகளை ஆயுர்வேதோபதேசப் படிக்கு நன்முய் முதலில் பிரமாணப்படி தெரிந்து கொண்டு, அவைகள் அநுபவத்துக்கும் பிரத்யக்ஷப் பிரமாணத்துக்கும் சரியாயி ருக்கிறதாவென்று அந்த சாஸ்த்ரஸம்மதமான அநுமானப் பிரமாண சகாயத்துடன் பரீக்ஷித்துப் பார்க்க வேண்டும். ஆயுர்வேதத்தை அந்த சாஸ்திரத்தில் கூறியபடி பிரத்ய க்ஷாதிப் பிரமாணங்களுக்கு சரியாக இருக்கின்றதா வெ ன்று அந்த சாஸ்திரஸம்பிரதாயப்படிக்கு அறியப் பிரயத் னம் செய்வதே உத்தமகல்பமான உண்மையான ஆராய்ச்சி யாகும். மேலே சொல்லிய படி பூர்த்தியாக ஆராய்ச்சி செய்தபிறகு அவசியமிருந்தால்– அதாவது வியாதி நிவிருத் திக்கு ஆயுர்வேதோபதிஷ்ட சிகித்ஸா யுக்தியோ, ஔஷதங் களோ போதாமலிருந்தால் இதர வைத்திய சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட முறையோ, ஔஷதங்களோ பிரத்யக்ஷத் தில் அதிககுணம் கொடுக்கக்கூடியதாக இருந்தால், அவை களை பரீக்ஷை செய்து ஆயுர்வேத சாஸ்திரத்தில் சேர்த்துக் கொள்ளவேண்டும். இவ்வித ஆராய்ச்சிக்கிரமந்தான் ஆயுர் வேதாபிவிருத்திக்கு ஏதுவாக முடியும்.

இவ்விதம் ஆயுர்வேத ஆராய்ச்சி செய்வது இக் காலத்

தில் ஸாத்யமாகுமா? ஏன்? ஆயுர்வேதத்தில் கூறிய விஷயங்கள் பல அதிந்திரியமானவை. யோகிகளுக்கு மட்டுமே பிரத்யக்ஷமாகக்கூடியவை. மகரிஷிகளால் திவ்ய திருஷ்டியால் கண்டுபிடித்துச் சொல்லப்பட்டவை. இவைகளை இப்போது அந்த ஞானசக்தி குறைந்தவர்களால் அறியவோ அபிவிருத்தி செய்யவோ முடியாதே. வாஸ்தவம். தபஸில் யோகசக்தியை விருத்தி செய்யாதவரை எளிதில் முடியாது தான். ஆனல் கருணை மூர்த்திகளான மகரிஷிகள் நமக்கு அவ்வளவு சிரமத்திற்கு இடம் வைக்கவில்லை. ரிஷிகளுடைய உபதேசங்கள் எல்லாம் சம்பூர்ணமாயும், என்றைக்கும் சலிக்காத ஸித்தாந்தங்களாயுமிருக்கின்றன. மேலும் ரிஷி காட்டியுள்ள

विद्या वितर्को विज्ञानं स्मृतिस्तत्परता क्रिया ।
यस्यैते षड्गुणास्तस्य न साध्यमतिवर्तते ॥

என்ற மார்க்கத்தைத் தீவிர விரதத்துடன் ஆசிரயிப்போமாகில் சந்தேகமின்றி லக்ஷ்ய ஸித்தியேற்படும்.

சரி, உன் மதப்படி ஆராய்ச்சி செய்ய எவ்வித சாதனஸம்பத் தேவை? கூறுவோம். தியாகபுத்தியும், ஒற்றுமையும், தகுந்த யோக்கியதையும், பெற்றுள்ள பல வித்வான்கள் முதலில் தேவை. பிராசீன நியாய வைசேஷிக யோகஸாங்கிய தர்சனங்களிலும் ஆயுர்வேதத்திலும் பூர்ண பாண்டித்தியம் அவசியம், சில பிரதான பண்டிதர்களுக்காவது இருக்கவேண்டும். அஷ்டாங்கங்களிலும் சிகிச்சைக்கு வசதியுள்ளதாக அதமபக்ஷம் 400 ரோகிகள் வசிக்கக்கூடிய ஆரோக்கியசாலை விஸ்தாரமானதாக வேண்டும். தகுந்த ஔஷத நிர்மாண சாலை வேண்டும். ஔஷதிவர்க்கங்களை யதேஷ்டமாய் வனங்களிலும் மலைகளிலும் வளர்க்கவேண்டும்.

ஆகட்டும். மேல் நாட்டு வைத்திய சாஸ்திர நிபுணர்களுடையவும், X-Ray முதலிய யந்திரங்களுடையவும், Chemical and Clinical laboratories உடையவும் உதவிகள்

ஆயுர்வேத ஆராய்ச்சிக்குப் பிரயோஜனமளிக்குமா? உப யோகிக்க முடியுமா? எவ்விதம் உபயோகமாகும்? பர மார்த்தத: யோஜித்துப்பார்ப்போமாகில் மேலே சொல்லி யதில் ஒன்றும் அவைகளிப்போதுள்ள படிக்கு ஆயுர்வேத முறைக்கு கிஞ்சித்தும் ஸாக்ஷாத்தாக உதவ முடியாது. X-Ray யந்திரங்களும், ரஸாயன சாலைகளும், அவர்களு டைய Physics and Chemistry சாஸ்திரப்படிக்கு நிறுவப் பட்டுள்ளன. ஆயுர்வேத சாஸ்திர சித்தாந்தப்படி இவை இல்லை. அதன்படி இல்லாததால், சாஸ்திரப்படிக்கு உப காரம் செய்ய முடியாது. ஆனால் நாம் இந்த நவீனக்கருவி களை ஸ்வீகரிக்கலாகாது என்று நினைக்கவே இல்லை. X-Ray, Microscope முதலிய யந்திரங்களும் மற்றுமுள்ள Laboratoryகளும் சாஸ்திர ஆராய்ச்சிக்கு எவ்வளவு உபகார மான சாதனங்களாயிருப்பினும் இவைகளை ஆயுர்வேத தர்சன சித்தாந்தப்படிக்கு முதலில் அறிந்து, பிறகு உபயோகத்தால் மட்டுமே ஆயுர்வேதாபிவிருத்தி யதார்த் தத்தில் செய்ததாகும். இல்லாவிடில், என்றைக்கும் ஆயுர்வேதம் பராதீனப் பட்டுத்தான் நிற்கும். இது அசாத்யமில்லை. கொஞ்சம் பிரணிதானத்தினாலேயே சாத்யமாகிவிடும். நவின விஞ்ஞான சாஸ்திரங்களின் வள ர்ச்சி யெல்லாம் நமது பாரத தேசத்தின் பழய நியாய வை சேஷிக- ஸாங்கிய- யோககிரந்தங்களிலும் பிருஹத்சம்ஹி தையிலும் போஜதந்திரத்திலும் உபதேசிக்கப்பட்ட மூல தத்துவங்களைக்கொண்டு விமர்சித்து ஆராய்ந்து பார்ப்போ மாகில் இங்கு ஸூத்ர ரூபமாக சொல்லப்பட்டவைகளு டைய விவரணங்களே பிராயச: மேல் நாட்டு விஞ்ஞான சாஸ்திர வளர்ச்சி என்பது வியக்தமாகும்.

ஆதலால் நமது தர்சனங்களில் பரிநிஷ்டிதர்களான பண்டிதர்கள் சிலர் Chemistry, Physics எனச் சொல்லப் படும் இப்போது அபிவிருத்தமான சாஸ்திரங்களை அந்த சாஸ்த்ரம் பயின்றவர்களிடமிருந்து முதலில் பயின்று, நமது பாரத 'தர்சன' ஸித்தாந்தப் படிக்கும் ஸம்பிரதா யப் பரிபாஷைப் படிக்கும் அவைகளிலிருக்கும் உபயுக்த

மான ஸாராம்சங்களையும் கிரஹித்து கிரந்தங்கள் எழுத வேண்டும். பின்பு, இவைகள் ஆயுர்வேதத்திற்கு மட்டு மல்ல; எல்லா மூர்யகலைகளினுடைய வளர்ச்சிக்கும் ஆர்ய விஞ்ஞானிகளால் முற்காலத்தில் முதலில் தொடங்கிய விஞ் ஞான பத்ததிக்கு அழிவில்லாத படியான வளர்ச்சிக்குப் பரம ஸாதனமாகும்.

வெளி நாட்டு விஞ்ஞானிகள் விஞ்ஞான சாஸ்த்ராபி விருத்திக்கு எவ்வளவு காலம் சிரமப் பட்டார்களோ, அவ் வளவு காலமும் சிரமமும் நமக்குத் தேவையில்லை. இதற்குக் காரணம் அவர்கள் தயாரித்து வைத்திருக்கும் விஷயங்களை நாம் நம்முடையதாக ஆக்கி சுலபத்தில் ஸ்வீகரித்து விட லாம் என்பது மட்டுமல்ல; ஆனல், நமது தர்சன சாஸ்த் ரங்களில் ஸகல நவீன விஷயங்களுடைய மூல தத்துவங்கள் (principles) மறைமுகளாலும், வியாக்கியாதாக்களாலும் சூத்ரத்திலும் பாஷ்யத்திலும் யதேஷ்டமாய் உபதேசிக்கப் பட்டுக் கிடக்கின்றனவே, அவைகளுடைய விஸ்தார விவ ரணம் தானே நவீன விஞ்ஞானம். சிரமப் பட வேண்டிய அம்சமாவது— பிராசீன 'தர்சன' வித்தாந்தப்படி நவீ னங்களை ஸமந்வயம் செய்து அறிந்து, பிராசீன பரிபா ஷைப் படி கிரந்த நிர்மாணம் செய்ய வேண்டியதென்ற அளவில் இருப்பதால், நமக்குக் காரிய ஸித்தி சீக்கிரமேற் படும்.

இதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யாத படிக்கு ஆயுர்வேத ஆராய்ச்சியோ மற்ற எந்த சில்பாதி கலைகளின் (Engineering & Industrial) ஆராய்ச்சியோ நடத்துவது நிஷ்ப்ரயோஜனமாவது மட்டுமல்ல; இது வரையிலிருந்து வரும் ஆயுர்வேதமும் மற்றும் சில ஆர்யகலைகளும் நிர்மூல மழிந்து விடும் என்பதில் சம்சயமில்லை. நாம் மேலே சொல்லியபடி ஆராய்ச்சி செய்ய யோக்யதையுள்ள பண் டிதர்களைத் தயார் செய்ய வேண்டும். நவீன விஞ்ஞானிக ளுடைய உதவியையும் சரியான வழியில் உபயோகித்துக் கொள்ள வேண்டும். புஷ்கலமான சாதன சம்பத்துட னும் பரிஷ்தானத்துடனும் வேலை செய்தால் ஆரம்பத்திலி

ருந்து 25 வருஷங்களுக்குள்ளேயே நவீன விஞ்ஞானங்களி லும், சல்யாங்கத்துடன் ஆயுர்வேதத்தின் அஷ்டாங்கங்க ளிலும் இன்றும் என்றும் மேல் நாட்டு எல்லா சாஸ்த்ரங் களையும் ஜயிக்கும் சாமர்த்யத்தையும் சக்தியையும் நாம் நிச்சயமாய் அடைந்து விட முடியும். ஆனல் அரசாங்கத் தாரின் பரிபூர்ணமான ஆதரவினலும் ஸஹாயத்தினலும் தான் இவை சாத்தியமாகும் மேல் நாட்டு நாகரிக மோ ஹத்தில் மயங்கி ஆரிய வித்யை—கலாசாரங்களில் இழந் துள்ள இப்போதைய அரசாங்கத்தாருக்கு நாம் சொல்லிய வழிப்படிக்கு ஆயுர்வேதம் முதலியவைகளில் ஆராய்ச்சி செய்ய ஆதரவு ஏற்படும்படியான பிரயத்னமும் வைத்ய பண்டிதர்களால் தான் செய்யும் படியாக இப்போதைய கால நிலையிருக்கிறது.

Chemistry, Physics முதலிய நவீன விஞ்ஞான சாஸ் திரங்களை நமது 'தர்சன' சாஸ்த்ரப்படி சம்பூர்ணமாய் பராமர்சித்து அபிவிருத்தி செய்த பிறகே தான் ஆயுர்வேத ஆராய்ச்சி ஆரம்பிக்க வேண்டுமென்று நாம் கருதவில்லை. அவசியமுமில்லை. X-Ray, Microscope, Laboratory முத லிய நவீன சாதனங்களை இருக்கிறபடி இஷ்டப்படி எடுத் துக் கொள்ளக் கூடாது. நமது தர்சனப்படி அவைகளை அறிந்து எடுத்துக் கொண்டால் தான் அவைகள் ஆயுர்வே தியங்களாகும் என்பதே. இந்த விஷயமான ஆராய்ச்சி சில பண்டிதர்கள் செய்து கொண்டிருக்க வேண்டும். கூடவே, இந்த நவீன உபகரணங்களின் ஸஹாயமவசிய மில்லாத எல்லாவித இதர ஆராய்ச்சிகளும் முதலிலிருந்தே செய்யலாம்.

பாண்டு ரோகம்.

[வைத்ய விசாரத—எஸ். வி. ராதாகிருஷ்ண சாஸ்த்ரீ]

(1946 டிஸம்பர் தொடர்ச்சி)

பாசக ரஞ்சக பித்தங்களின் சக்திக் குறைவால் ஏற் படும் ரஸாஜீர்ணத்தால் ரஸம் மலமாக, கபம் அதிகமாகி

கபத்தின் ஸஹஜமான மூத்ரம், மலம், தோல் முதலியவை களில் ஏவளுப்பு ஏற்படுகின்றது. ரக்த தாதுவிற்கு ஆகந் துக காரணங்களால் க்ஷயம் ஏற்பட்டால், வாயுவின் கோபம் ஏற்படும். வெளுத்த நிறம் சிறிது கருப்பு நிறம் கலந்ததாக மாறுகின்றது. ஆனல் பித்தஜ பாண்டுவில் :— மனிதன் ஸ்வபாவமாக பித்த பிரகிருதியும், பித்தத்தை அதிகரிக்கச் செய்யும் ஆஹாரத்தை அதிகம் அருந்துகின்ற வனுகவுமிருந்தால், பித்தம் தன்னளவிலிருந்தும் அதிகரிக் கின்றது. அன்னம் விதக்தமாக மாறுகின்றது. விதக்த மான அன்னத்திலிருந்து 'ரஸம' ஏற்படாததால், ரஸ மலமான ச்லேஷ்மத்தின் க்ஷயமும் ஏற்பட்டு, விதக்த பித்த மதிகமாகி, தாதுக்ஷயத்தால் குபிதமான வாயுவுடன் சேர் ந்து ஸ்தானத்தை விட்டு மற்றொரு ஸ்தானமடைந்து ஜ்வ ரம், எரிச்சல். குளிர்ந்த வஸ்துஸ்திதியில் ஆசை, மலம், மூத்ரம், த்வக் முதலியவை மஞ்சளாகுதல் இவை ஏற்படு கின்றன. ரத்த விருத்தி ஏற்படச் செய்யும் ரஸ ஸாரமே உத்பத்தியாகாததால் ரக்த விருத்தி ஏற்படுவதில்லை.

மலம். மூத்ரம், த்வக்

ரக்தாமாசயமான யக்ருத்தில் ரக்த பாகம் ஏற்பட்ட வுடன், சாரமான மாம்ஸோத்பாதகமான மதுரகாம்சம் பிரிக்கப் பட்டவுடன் மலமான பித்தம் தனிக்கப் பட்டு பித்த கோசத்தில் சேர்ந்து ஆஹார பாக காலத்தில் கிரஹ ணிக்குக் கொண்டு போகப் படுகின்றது. அந்திரத்தில் கிட் டமென ஆஹாரத்திலிருந்து பிரிக்கப் பட்ட மலத்தை நிறப் படுத்தி வெளியில் தள்ளப் படும் அம் மலத்துடன் தானும் வெளியேறுகிறது. தான் அதனுடன் இருக்கும் வரை அதில் கிருமிகள் உத்பத்தியாகாமல் பாதுகாத்து வருகிறது. இம் மாதிரியே ரக்தத்தோடு சேர்ந்து வரும் மலமான பித் தம் விருக்கங்களில் பிரிக்கப் பட்டு மூத்திரத்தை மஞ்ச ளாக்கி தானுமதுவுடன் வெளிவருகிறது. அம்மாதிரியே தோலின் நடுவிலிருக்கும் பிராஜகம் என பித்தம் தோலில் உஷ்ணத்தைக் காப்பாற்றுவதிலும், அழகு, சோபை, நிறம் இவைகளைக் காப்பாற்றுவதிலும் முனைந்திருக்கிறது.

இவ்விதமான பித்தம் முன் கூறிய காரணங்களால் சிறிதளவேனும் குறைபட்டால் பித்தம் தனது சக்தி இழந்தால் மலம் முதலியவைகளில் நிறம் திட்டப் படாமலும் ஸ்வபாவமான உஷ்ணம் முதலியவை தாக்கப் படாமலுமாகின்றது. விதக்தமான பித்தமதிகமாகி இவைகளில் அதிக மஞ்சள் நிறமுண்டாக்கி எரிச்சல் முதலியவைகளை அதிகமாக்குகின்றது.

அத்துடன் சரீரத்தில் ரக்த பூர்ணதையால் ஸ்வபாவமாக ஏற்படும் சிவந்த நிறம், ரக்தக் குறைவால் குறைவதாலும் பிராஜக பித்தத்தில் விகிருதியாலும், ரக்தம் ஏறக் குறைய பூர்ணமாக இருந்தும் ரக்தம் விகிருதி யடைந்தாலும், த்வக்கில் வர்ண விகிருதி ஏற்படுகின்றது.

நிதானம்.

1. ரக்தக்ஷயம் :— ஸஸ்த்ராவசாரண சமயத்தில் அதிஸ்ருதி, கர்ப்ப ஸ்ராவம், கர்ப்ப பாதம், பிரஸவ சமயத்தில் அதிஸ்ருதி, ரக்த பித்தம், ரக்தார்சஸ், ராஜயக்ஷ்மாவில் ரக்த வமனம், அஸ்ருக்தரம், பிரவாஹிகா, ஆமாசயாதிகளில் விரணம் முதலியவைகளில் ஏற்படும் ரக்தக்ஷயம்.

2. மித்யாஹார விஹாரம் :— வழக்கமாக ஜீர்ணமாகாததும், ஆத்மாபனங்களில் வயிற்றில் வலி உண்டு பண்ணுபவைகளும், மலபந்தம் அல்லது அதிசாரமுண்டுபண்ணுபவைகளும் அதிகமாக சாப்பிடுதல் வாத பாண்டுவிற்கும்; விதாஹி அம்லம், லவணம், க்ஷாரம், மத்யம் இவைகளை அதிகமாக அருந்துதல் பித்த பாண்டுவிற்கும்; தயிர், வெல்லம், தூஷித ஜலம் இவைகளை அதிகமாக அருந்துதல், அஜீர்ணமான சமயத்தில் குருவான ஆஹாரமும் அடிக்கடி சாப்பிடுவதும் இவைகள் கபஜ பாண்டுவிற்கும் காரணமாகின்றன.

(தொடரும்.)

ஸ்ரீ:

ஆரோக்கிய சந்த்ரிகா—அநுபந்தம்.

பிரவாஹிகா	ஸம்ஸ்க்ருதம்	V. B. நடராஜ சாஸ்த்ரீ
சீதபேதி—வயிற்றுக் கடுப்பு	தமிழ்	
DYSENTERY	இங்லீஷ்	

(1946 டிஸம்பர் மாதத் தொடர்ச்சி)

சிகித்ஸை.

பத்திய நியமம்:— பிரவாஹிகா ரோகத்தின் நிலைமையையும், நோயாளியின் நிலைமையும் நன்கு கவனித்து தகுந்த படி பத்தியாகாரம் சாப்பிட வேண்டும். தாங்கும் சக்தியுள்ள நோயாளியாயிருப்பின் ஆரம்பாவஸ்தையில் முதல் 24 மணி நேரம் முழு உபவாசமிருப்பது மிகவும் உபகாரமாயிருக்கும். பாலர்கட்கும் மற்ற தாங்காதவர்கட்கும் சுத்த உபவாஸம் கூடாது. மிகவும் எளிதில் ஜீர்ணமாகக்கூடியதும், சரீரத்தை உஷ்ணப்படுத்தாததுமான கஞ்சி முதலிய திரவ ஆகாரம் அடிக்கடி கொஞ்சங்கொஞ்சமான அளவில் சாப்பிடவேண்டும். புழுங்கலரிசிக்குறுணை, ஜவ்வரிசி, பார்லி, ஆரோரூட்மாவு, நெல்பொறிமாவு இவைகளில் ஒன்றினுல் கஞ்சி காய்ச்சி சாப்பிடலாம். பிரவாஹிகா கடுமையாயிருக்கும் போது மாட்டுப் பால் அதிகம் சேர்க்கக்கூடாது. காபியும் கூடாது. ஆட்டுப் பால் பக்குவாய்க் காய்ச்சி கஞ்சியுடன் கலந்து சாப்பிட மிகவும் நல்லது. * ஜீர்ண ப்ரவாஹிகையில் வயிற்றுப்புண்ணை ஆற்றதலி ஆட்டுப் பால் அதிகமளவில் சாப்பிடுவது உபகாரமாயிருக்கும். ரக்தப் போக்கு அதிகமாயிருக்கும் பிரவாஹிகையில்— சுமார் 1 தோலா கருப்பு எள்ளு 1 தோலா கருப்பு வெல்லம் இவற்றைச் சேர்த்து நன்றூய் அம்மியில் அரைத்து 4 அவுன்ஸ் அளவு ஆட்டுப் பாலில் கலந்து காய்ச்சி சாப்பிட்டால் ரக்தப் போக்கு சீக்கிரத்தில் குறைந்து

---

* ஜீர்ண ப்ரவாஹிகா— வயிற்றுக் கடுப்பு நாள்பட்டுத் தொடர்ந்து இருக்கும் நிலைமை. (Chronic dysentery).

விடும். ஜ்வர வேகம் அதிகமில்லா விடில் பசுவின் மோர் கஞ்சியில் கலந்து சாப்பிட நல்லது. மோரில் கருவேப்பிலை யைக் கசக்கிக் கொள்வது மிகவும் நல்லது. கருவேப்பிலை வாஸனைக்காக மட்டும் சேர்க்கச் சொல்ல வில்லை. பிரவாஹிகை அதிஸாரம் கிரஹணீ இவைகளில் கருவேப்பிலை ஓர் சிறந்த மருந்தாகும். பிரவாஹிகா கடும் நிலையில் மோர் சேர்த்தாலும் உப்பு—பெருங்காயம் ஆரம்பத்தில் சேர்க்கக் கூடாது.

பிரவாஹிகாவின் அவஸ்தா பேதங்களை அநுஸரித்து சில மருந்துக் கஞ்சிகளைத் தயாரித்துச் சாப்பிட்டால் விசேஷப் பயன் ஏற்படும்.

1 விளாம்பழம், வில்வ விருக்ஷத்தின் சிறிய பிஞ்சு, புளியாரைக்கீரை, மாதுளம்பிஞ்சு, மாம்பருப்பு வகைக்கு சுமார் 1 தோவா வீதம் சேர்த்து நன்றாய் நசுக்கி சுமார் 64 அவுன்ஸ் ஜலம் (பக்கா 1 படி) சேர்த்து 32 அவுன்ஸ் மிச்சமாகக் காய்ச்சி வடிகட்டிய கஷாயத்தை அரிசி முதலியதால் செய்யப் படும் கஞ்சிக்குச் சேர்க்க வேண்டிய ஜலத்திற்குப் பதிலாக இக்கஷாயத்தைச் சேர்த்துக் கஞ்சி காய்ச்சவும். கஷாயம் பாதியும் மோர் பாதியுமாகச் சேர்த்தும் கஞ்சி தயாரிக்கலாம். ரக்தக்கழிவு மிகுதியாயுள்ள பிரவாஹிகையில்– விளாமிச்சம் வேர், நீலோத்பலக்கிழங்கு, சுக்கு ஓரிலை வேர் இவைகளால் செய்த கஷாயத்துடன் கஞ்சி

---

1. दधित्थबिल्वचांगेरी तक्रदाडियसाधिता ।
पाचनी ग्राहिणी पेया..... ॥
शालपर्णी बलाबिल्वैः प्रश्निपर्ण्या च साधिता ।
दाडिमाम्ला हिता पेया पित्तश्लेष्मातिसारिणाम् ॥
पयस्यर्धोदके छागे ह्रीबेरोत्पलनागरैः ।
पेया रक्तातिसारघ्नी पृश्निपर्ण्या च साधिता ।
जम्ब्वाम्रास्थिदधित्थाम्लबिल्वैः सांग्राहिकी मता ॥
चरके अपामार्गतण्डुलीये ।

தயாரித்து ஆட்டுப் பால் சேர்த்துச் சாப்பிட நல்லது. கபப் போக்கு அதிகமாயிருக்குமிடத்தில் ஓரிலை வேர், மூவிலை வேர் குறுந்தோட்டி வேர் வில்வப் பிஞ்சு இவைகளால் செய்த கஷாயத்தில் கஞ்சி தயாரித்து புளிப்பு மாதுளைச் சாறு கொஞ்சம் புளிப்புக்குச் சேர்த்து சாப்பிட உத்தமம்.

பச்சைக் கோரைக் கிழங்கு, வில்வப் பிஞ்சு, மாதுளம் பிஞ்சு, நெல்லி முள்ளி, புளியாரைக் கீரை, மாம்பருப்பு, கருவேப்பிலை கொத்தமல்லிக் கீரை இவைகளில் சிலதுகளை ருசிக்குத் தகுந்தவாறு சேர்த்து காரமில்லாமல் கொஞ்சம் உப்பும் மிளகும் சேர்த்து துவையலரைத்துக் கஞ்சிக்கு வ்யஞ்ஜனமாகச் சேர்த்துக் கொள்ளலாம். வியாதி சமனமாகி பசி ஏற்பட்டு அன்னம் சேர்க்கும் நிலை ஏற்பட்ட பொழுது ஆரம்பத்தில் மோரில் கரைத்த சாதம் சாப்பிடவும். பிறகு கருவேப்பிலையும் ஓம ஜீரகமும் சேர்த்து வெடிக்க விட்டுச் செய்த மோர்க்குழம்பு, சிறிதும் காரமின்றி மாங்கொட்டைப் புளிப்பு கருவேப்பிலையினுல் செய்த வற்றல் குழம்பு சேர்த்து சாதம் ஜாக்ரதையாய் பசிக்குத் தகுந்தவாறு சாப்பிடலாம். பிரவாஹிகா ரோகத்தில் மாதுளம்பழம் தவிர வேறு ஒருவித பழமும் உபயோகிக்கக் கூடாது. புளிப்பு மாதுளை அல்லது இனிப்பு மாதுளை ருசியின்படி சாப்பிடலாம். पथ्यैरेव प्रशाम्यन्ति व्याधयो भेषजं विना என்றபடி பிரவாஹிகையில் எல்லா அவஸ்தைகளுக்கும் பத்தியம் கூறினேம். இந்தப் பத்தியமான ஆஹாரத்திலிருந்தால் வியாதி அதிகமாகாமல் சீக்கிரம் சமனமாகும்.

மருந்துகள்.

பிரவாஹிகையின் ஆரம்பாவஸ்தையில் ஸாதாரணமாய் மலச்சிக்கல் இருக்கும். மலமொருசமயமிருகிப்போலும் ஆமமதிகமாய் மலம் கட்டிமுட்டிகளுடன் வலியுடன் வெளியாகும். நாக்கில் மாவு படிந்திருக்கும். இந்த நிலையில் முதலில் அவசியம் 4, 5 தரம் கன்ருய் பேதியாகும் படிக்குக் கொடுக்க வேண்டும். கட்டு மலம் கழிந்தால் வியாதி சீக்கிரம் குணமாகும். பிரவாஹிதையில் ஜ்வரம்

கடுமையாக இல்லாவிடில் சீதகம் அதிகம் கடுப்புடன் போகும் பிரவாஹிகையில் விளக்கெண்ணையே பேதிக்கு அதிகம் நல்லது. 4 5 தரம் போகக்கூடிய அளவு விளக்கெண்ணை காச்சின பசும்பாலுடன் அல்லது வெந்நீருடன் கலந்து சாப்பிடவும். அதிக ஜ்வரமிருந்தாலும் ரக்தம் அதிகமாக இருப்பினும் விளக்கெண்ணை கூடாது. அங்கு கடுக்காய்தோலும் கொஞ்சம் அரிசித்திப்பிலியும் சேர்த்துக் கஷாயம் செய்து 2 மணிக்கொருதரம் 2 அவுன்ஸ் வீதம் 4 தரம் நன்றாக மலப்பிரவிருத்தி ஆகும்வரை கொடுக்கவும். அல்லது பேதியுப்பு என்று சொல்லப்படும் (Magsulph or Sodi Sulph) உப்பை சுமார் அரை தோலா வீதம் 1அவுன்ஸ் சோம்பு கஷாயத்தில் 2 மணிக்கொருதரம் கரைத்து 4 தரம் நன்றாக பேதியாகும் வரை குடிக்கலம்.

வயிற்றில் ஆமம் விலகின பிறகே கட்டுமருந்துகள் (ग्राहकौषधं) கொடுக்கவேண்டும். கட்டுமருந்து கொடுக்கும் போதும் கிரமேண கட்டும்படிக்கு பாசன தீபன மருந்துகள் கலந்தே கொடுப்பதுதான் உசிதம்.

பிரவாஹிகையில் அவஸ்தைகளை அநுஸரித்து வைத்தியர்கள் நேரில் கவனித்துக் கொடுக்கவேண்டிய ஔஷதங்கள் பல இருக்கின்றன, அவைகளை நாமிங்கு சொல்லுவதில் பயனில்லை. குடும்பத்தில் தானுகவே எளிதில் செய்யக்கூடிய சில ஔஷதங்களையே இங்கு கூறுகிறோம்.

(தொடரும்.)

14-வது தமிழ் நாடு ஆயுர்வேத ஸம்மேளனம்

ஆயுர்வேத வைத்யர்கள் யாவர்களுக்கும் மற்றும் ஆயுர்வேத அபிமானிகளுக்கும் அடியிற்கண்ட விஷயத்தை மிக மகிழ்ச்சியு டன் தெரிவித்துக் கொள்கிறேன்.

14-வது தமிழ் நாடு ஆயுர்வேத ஸம்மேளனம் 1947 பிப்ர வரிமீ கடைசி வாரத்தில்

வைத்யரத்ன பண்டிட் M. துரைஸ்வாமி ஐயங்கார் A.K.A.C.
ஆயுர்வேத பூஷணு, ஆயுர்வேதாசார்ய அவரிகள்
தலைமையில் நடைபெறும்.

சென்னை சுகாதார மந்திரீ

ஸ்ரீமதி ருக்மிணீ லக்ஷ்மீபதியம்மையவர்கள்

ஷை ஸம்மேளனத்தையும்

DR. A. சிதம்பரநாதம் செட்டியார் M. A., PH. D.
Proffeser of Tamil, Annamalai University)

ஷை மஹாநாட்டில் நடைபெற விருக்கும்
பொருட்காக்ஷியையும் திறக்க
அன்புடன் இசைந்துள்ளார்கள்.

அன்பர்கள் விஜயம் செய்து ஷை மகா நாட்டை சிறப் பாக நடத்திவைக்கக் கேட்டுக்கொள்வதுடன் பிரதிநிதிக் கட்டணம் ரூ. 5-0-0ம், பொருட் காக்ஷியில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் அதற்கான கட்டணம் ரூ. 10-0-0ம் பிப்ரவரிமீ 15க்குள் அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

காரியக் கிரமத்துடன் அழைப்பிதழ்கள் கூடிய சீக்ரம் அனுப்பப் பெறும். ரேஷன் ஸமயமானதால் பிரதிநிதிக

ளாக வருகிறவர்கள் முன்னதாகத் தெரிவித்தால் போஜ னதி சௌகர்யங்களை அளிக்க முன்னதாக ஏற்பாடுகள் செய்ய சௌகர்யமாயிருக்குமாகையால் அன்பர்கள் முன் னதாகத் தாங்கள் வரும் விஷயத்தைத் தெரிவிக்கக் கேட் டுக் கொள்வதுடன் பிரதிநிதிக்கட்டணம் ரூபாய் ஐந்தை யும் முன்னதாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்

வைத்ய விசாரத, பிஷக்ரத்ன

DR. P. S. ஸ்ரீனிவாஸய்யர் A.V.A.C.

ஆயுர்வேத & ஸாஹித்ய சிரோமணி,

Organising Secretary,

பாரதிய ஆயுர்வேத அமிர்த நிலையம்,

சிதம்பரம்.

Printed and Published by S. M. Sundararajacharya
at the Sri Vilasam Press, Srirangam